31.7.93 இல் 3,4 பக்கம் இல்லை

யாழ். மாநக
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 17 வியாழக்கிழமை (01-07-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 215

# தெரிவுகுழுவிலிருந்து விலக எதிரணி முடிவு?

## அரசின் போக்கில் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தமிழ், முஸ்லிம் கட்சிகள் வெளியேறியிருப்பதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் முன்னணியும் தெரிவுக்குழுவிலிருந்து விலகத் தயாராகிவருகின்றது.

அரசின் போக்கில் அதிருப்தியுற்றே எதிர்க்கட்சிகள் இம்முடிவுக்கு வந்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் எதிர்க் கட்சிகள் ஐக்கிய முன்னணியின் அமைப்பாளருமான தர்மசிறி சேனநாயக்கா எதிர்க் கட்சிகளின் நிலை குறித்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

தனிப்பட்ட கொள்கைகள், வேறுபாடுகளை விடுத்து, நாட்டின் நன்மை கருதி, இறுபான்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### டா ரொறொன்டோவில்

## ...ாவலிகளின் தாக்குதலில் ...ரு ஈழத்தமிழர் படுகாயம்

...டாவில் வசிக்கும் வெளி...டார் மீது இனரீதியாக ...ப்பட்டு வரும் தொடர் ...ன தாக்குதல்களில் ...யாக இரண்டு இலங் ... தமிழர்கள் படுகாய ...தனர் என்று அறிவிக் ...கின்றது.

...ாவன் முத்துலிங்கம், ...ஜா விநாசித்தம்பி ஆகி...ர் ஆபத்தான நிலையில் ...றான்டோ மேற்கு ஆஸ்...யில் அனுமதிக்கப்பட் ...னர்.

...வசர சத்திர சிகிச்சைக்கு ...டுத்தப்பட்ட முத்துலிங் ...கவலைக்கிடமான நிலை ... இருப்பதாகத் தெரிவிக் ...கிறது.

ஓர் ஆணும் பெண்ணும் உடைந்த பியர் போத்தலினால் முத்துலிங்கத்தின் தலை மீது தொடர்ச்சியாகத் தாக்கினர் என்றும் 'ரொறொன்டோ ஸ்டார்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

உணவு விடுதி ஒன்றில் வேலை செய்துவரும் சிவராஜா விநாசித்தம்பி சம்பவதினம் வேலை முடிந்து திரும்பும் போது தாக்கப்பட்டார் என்றும் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

ஆஸ்பத்திரியில் தமது கணவருடன் அவரது மனைவி சிவராஜா பவானி தங்கியிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-ஓ)

## ஐ. நா. அதிகாரிகள் இன்று கோதீவுக்கு!

...ழ்ப்பாணம், ஜூலை. 1 ...வந்துள்ள அகதிகளுக் ...ஐ. நா. தூதரகப் பிரதி... இருவரும் இன்று முற் ...10 மணியளவில் விடு... புலிகளின் பாதுகாப் ...கோதீவு இறங்கு ...யைப் பார்வையிடவுள்

...களுக்கான ஐ. நா. ...த்தின் இலங்கைக் ...வதிவிடப் பிரதிநிதி ...காசிம் ஊர்க்கான், ...ப்பு அதிகாரி டாக்டர்

பீற்றர் நிக்கலஸ் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் யாழ் வந்து, விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியிருந்தனர் என்பது தெரிந்ததே.

இவர்கள் இருவரும் நாளை இங்கிருந்து புறப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்கள் நேற்று முற்பகல் யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் அதி வண தோமஸ் சௌந்தரநாயகத்தைச் சந்தித்தனர். (உ-5)

## ...டற்புலி மேஜர் தாகூர் ...ாலிக் கடலில் வீரச்சாவு

...ழ்ப்பாணம், ஜூலை 1 ...ாலி கடற்பரப்பில் ... முன்தினம் இரவு 8 ...வில் கடற்புலிகளுக் ... படையினருக்கும் ...யே கடும் மோதல் இடம் ...து. இம் மோதல் சம் ...ல் மக்கள் பாதுகாப்பு ...ல் ஈடுபட்டிருந்த ...ளி ஒருவர் வீரச்சாவ ...ந்தார்.

கடற்புலி மேஜர் தாகூர் அல்லது அழகன் (மார்க்கண்டு உத்தமசீலன் -நாகர் கோவில் வடக்கு) என்ற போராளியே வீரச்சாவடைந்தார்.

இந்த மோதலில் படையினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றனர்.

கடற்புலி மேஜர் தாகூரின்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ...தாழில் சான்றிதழ் பெற ...றியோர் மீது நடவடிக்கை

...ழ்ப்பாணம், ஜூலை 1 ...ிபம், தொழில் சான் ...ளைப் பெறத் தவறு ...க்கு எதிராக அந்தந்தப் ...சங்களில் உள்ள தமிழீ ...ாவல்துறையின் காவல் ...மனைகள் சட்ட, ஒழுங்கு ...டிக்கைகளை மேற்கொள் ... தமிழீழ காவல் ... பொறுப்பாளர் அறி...வித்தார்.

...ாதுள்ள போர்க்கால ...லயில் எமது மக்களின் ...ுதி தமிழீழவிடுதலைப் ...ின் நிதித்துறையின ...வாணிபம் செய்யும் சகல ...ான வர்த்தகர்களையும் ...ணிபம் தொழிற்பதிவுச் சான்றிதழ்'' பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தது.

இதற்கான கால எல்லையும் சகல வர்த்தகர்களுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அக்கால எல்லை ஏற்கனவே முடிவுற்றிருந்தாலும் அவ்வாணிபத் தொழில் சான்றிதழ் பெறாத சகல வர்த்தகர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக அந்த அனுமதிச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

### தடை செய்யப்பட்ட பொருள்களுடன்

# பருத்தித்துறை வந்த றுகுணு பின் திடீரெனத் திரும்பியது!

யாழ்ப்பாணம், ஜூலை 1

அரசினால் முதலில் தடை நீக்கப்பட்டு பின்னர் தடை செய்யப்பட்ட பொருள்களை ஏற்றிக் கொண்டு வடக்கு நோக்கி வந்து, பின் திருமலையில் இடைமறிக்கப்பட்டு தரித்துநின்ற 'றுகுணு' கப்பல் நேற்றுக் காலை திடீரெனப் பருத்தித்துறைக்கு வந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது!

நேற்றுக்காலை பருத்தித் துறைக்கு வந்த அந்தக் கப்பல் தடைசெய்யப்பட் பொருள்களில் நூறு பரல் இன்ஜின் ஒயிலையும், 138 'கேஸ்' தீப்பெட்டிகளையும் இழுவைப் படகு ஒன்றில் இறக்கிப் பின்னர்,

அவசர அவசரமாக அவற்றைத் திருப்பி ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறைக்கு விரைந்து சென்றுவிட்டது!

கொழும்பிலிருந்து புறப்பட்டு திருகோணமலையில் தரித்துநின்ற 'றுகுணு' கப்பல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்களில் 7 படையினர் பலி!

கொழும்பு, ஜூலை 1

கடந்த இரண்டு வாரகாலத்தில் வடக்கு—கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே நடந்தமோதல்களில் 7 படையினர் கொல்லப்பட்டனர்.

கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். (உ-எ)

## பதற்றத்தை உண்டாக்கிய கடற்படைக் கப்பலும் படகும்!

பருத்தித்துறை, ஜூலை 1

''றுகுணு'' கப்பல் தடை செய்யப்பட்ட பொருள்களுடன் பருத்தித்துறைக்கு வந்ததை அறிந்து கடற்படையின் பெரிய பீரங்கிக் கப்பல் ஒன்றும் பீரங்கிப் படகு ஒன்றும் அங்கு வந்து பதற்றத்தை ஏற்படுத்தின.

''றுகுணு'' வை பருத்தித் துறையிலிருந்து விரைவாக கூட்டிச்செல்லும் நோக்குடனேயே அவை வந்ததாகக் கூறப்படுகிறது.

பீரங்கிப் படகு றுகுணுவுக்கு மிகச் சமீபமாக, பாதுகாப்பு வலய எல்லைக்குள் வந்து விரைவில் திரும்புமாறு அவசரப்படுத்தியது.

இரண்டு பொருள்களின் ''பாஜ்'' ஜில் இறக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை திரும்ப ஏற்றுவதற்குத் தொழிலாளர்கள் பின்னடிக்கின்றனர் என்றும் கப்டன் தெரிவித்த போது—

பொருள்களுடனும்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதியின் உறவினர் சுகவீனமுற்றார்

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் வந்த அவர்களின் உறவினர்களில் ஒருவர் திடீர் சுகவீனமுற்றார்.

பிரேமசேனா கின்மெனிக்கா (வயது (75) என்ற இந்த வயோதிபப் பெண் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-எ)

# முறிந்து விட்ட பேச்சு மீண்டும் ஆரம்பிக்கும்

## பி.பி.ஸி. வெளியிட்ட ஊகம்

கொழும்பு, ஜூலை 1

உடல் நலம் குன்றிய போர்க்கைதி ஒருவரை விடுதலை செய்ய புலிகள் முன்வந்துள்ளதால், போர்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக முறிந்து விட்ட பேச்சு வார்த்தை மீண்டும் தொடங்கி விட்டதாகக் கூறலாம்.

கொழும்பில் இருந்து பி.பி.ஸி, செய்தியாளர் சியாகோநுவாஸ் அனுப்பிய செய்திக் கண்ணோட்டத்தில் முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

போர்க்கைதிகளை விடுதலை செய்வது பற்றிய விவகாரம் சில நாட்களுக்கு முன்னர் நாடு முழுவதும் பலரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர மாணவர்களுக்கு.........

வெளி வந்து விட்டது!!!
விற்பனையாகின்றது!!!

**வர்த்தகமும் நிதியும்**
அலகு

**★ வங்கிகளும் வங்கித் தொழிலும் ★**

தொகுப்பு: இராஜகிருஷ்ணர் இரகுநாதன்
பட்டதாரி மாணவன்,
முகாமைத்துவக் கற்கைகள்,
யாழ் பல்கலைக்கழகம்.

★ இலங்கை மத்திய வங்கி
★ வணிக வங்கிகள்
★ சேமிப்பு வங்கி
★ அபிவிருத்தி வங்கிகள்
★ கிராமிய வங்கிகள்
★ வியாபார வங்கிகள்

ஆகியவற்றின் சகல செயற்பாடுகளையும் மிக அண்மைக் கால மாற்றங்களையும் உள்ளடக்கிய கைநூல்.

விலை ரூபா 40/

கிடைக்குமிடங்கள்
- பூபாலசிங்கம் - புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
- விக்னா கல்வி - நிலையம், யாழ்ப்பாணம்.
- பூச்சரம், சாவகச்சேரி.
- சிவாகி, சாவகச்சேரி
- BEACON- நெல்லியடி.
- திருமகள்- புத்தகசாலை, நெல்லியடி.
- கமலா அன்ட்- பிறதேர்ஸ், பருத்தித்துறை
- அருணோதயம்- வியாபாரிமூலை.

மற்றும் ஏனைய பிரபல புத்தகசாலைகள்

(6303)


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை புனித மரியாள் வித்தியாலய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு.

★ அச்செழு வளர்மதி எதிர் நாவாந்துறை கலைவாணி.

★ குருநகர் பாடும்மீன் எதிர் திருநகர் பாரதி.

o o o

டாக்டர் எஸ். இராஜேந்திரம் நினைவு வெற்றிக் கிண்ணத்துக்காக சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் இரண்டாவது வருடாந்த—மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி:-பிறவுண்ஸ் வி. க. 'ஏ' அணி எதிர் யுதி வி. க. 'ஏ' அணி,

★ 4-30 மணி:- மணிமோகன் வி. க 'பி' அணி எதிர் ஜுபிற்றர் வி. க. 'ஸி' அணி.

இந்த ஆட்டங்கள் யாவும் சங்கானை பாரதி மைதானத்தில் நடைபெறும். (உ)

# துறைமுக விபத்தில் தொழிலாளி மரணம்

## பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று முன்தினம் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கிக்கொண்டிருந்த போது இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

நாவற்குழி ஐயனார் அகதி முகாமைச் சேர்ந்த ஆறுமுகம் சிவபாலன் (வயது 34) என்பவரே மரணமானவராவார்.

துறைமுகத் தொழிலாளியான இவர் செவ்வாய் காலை சப்பலில் இருந்து ''பாஜ்'' இற்குப் பொதிகளை இறக்கிக் கொண்டிருந்தவேளை, இறக்கி கொண்டிருந்த பொதி ''பாஜ்'' உடன் சேர்த்து இவரை மோதியதாகக் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த அவர் உடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் நேற்று அதிகாலை 2 மணிக்கு அங்கு மரணமானார், (உ–15-12)


உ
ஸ்கந்தன் துணை
ஸ்கந்த வரோதயக் கல்லூரி

**தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்**

காலம்: 02.07.1993 வெள்ளி பி.ப 5 00 மணி
இடம்: கல்லூரித் திறந்த வெளியரங்கு,
தலைவர் : திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள் (கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர், கலாநிதி, அ.சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு.இ.சிவானந்தன் அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், மருதனார்மடம்)

தாபகர் நினைவுரை
திரு பொன். நாகரத்தினம் அவர்கள்
(முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

★ கலை நிகழ்ச்சிகள் ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர்
ஆசிரியர்கள், மாணவர்கள்

கந்தரோடை
சுன்னாகம்.

(C 5418)


# இன்று

ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றத்தின் புதிய அலுவலகம் இன்று காலை 8-00 மணிக்கு ஈச்சமோட்டை வட்டிப்புலம் ஞானவைரவர் ஆலயத்துக்கு முன்பாக திறந்துவைக்கப்படும். (ஒ 17)

# பென்சன் வவுச்சர் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம் ஜூலை 1

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஜூலை மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளன

திருகோணமலையில் இருந்து நேற்றுப் பருத்தித்துறையை வந்தடைந்த 'குமண' கப்பலில் கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். அரச அதிபரின் கொழும்பு இணைப்பு அலுவலர் அவற்றை இங்கு எடுத்து வந்துள்ளார்.

பென்சன் வவுச்சர்கள் இன்று யாழ். செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்

இம்மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் மாத முதல் திகதியிலேயே இங்கு வந்து சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ 5)


விண்ணக வாழ்வில்

**31ஆம் நாள் நினைவு**



அமரர்

**கிளேற்றன் நல்லையா**

(உரிமையாளர், ஒளி இல்லம் - Bright House)

மலர்வு: 10 – 12 – 1947
உதிர்வு: 01 – 06 – 1993

உங்கள் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தினாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக 01-07-1993 இன்று வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் துக்கப் பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்,
தாய், சகோதரர்கள்.

நன்றி நவில்கின்றோம்

கடந்த 01 - 06 - 1993 அன்று சடுதியாக எம்மை பிரிந்த எங்கள் அன்பு அண்ணன் கிளேற்றன் நல்லையா அவர்களின் இழப்பால் நாம் துயருற்றிருந்த வேளையில், எங்கள் துக்கத்தில் பங்கேற்று எமக்கு ஆறுதல் அளித்ததுடன் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றிகள் பல.

சகோதரர்.

ஒளி இல்லம்,
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/5343)



யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் அனுமதியுடன்

**அளவெட்டி**

விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும்

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

இடம்:- சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானம்
காலம்:- 04-07 1993 ஞாயிற்றுக்கிழமை
பி.பகல் 2.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(5981) விநாயகர் வி.கழகம்


# வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை — மானிப்பாய்

## இறைச்சிக் கடை குத்தகை 1993

உதயன் 29-06-93 இதழில் பிரசுரமான மேற்படி விடயம் சம்பந்தமான அறிவித்தலில்—

மானிப்பாய் கிராமம் — பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக் கடையின் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 21,000/- என்றும்-

பண்டத்தரிப்புக் கிராமம்- மாகியப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடையின் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.5,250/- என்றும்-

திருத்தி வாசிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொண்டர் ஆசிரிய சேவை:

# 13 ஆயிரம் பேருக்கும் உடன் நிரந்தர நியமனம் வழங்குக

## ஜனாதிபதிக்கு செல்லச்சாமி கடிதம்

கொழும்பு, ஜூலை 1

தொண்டர் ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் இன்னமும் 13 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கைத்தொழில்துறை ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் நடைமுறைச் சாத்தியமற்றவையாக இருக்கின்றன. உதாரணமாக 1-1-89 தொடக்கம் 31-12-89 வரை ஒரு பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக இருந்த ஒருவருக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற நிபந்தனையை நீக்க வேண்டும்.

அக்காலப்பகுதியில் பிரசவலீவில் இருந்தவர்களும், அக்கால கட்டத்தில் இடம்பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களும் இந்த நிபந்தனையால் நிரந்தர நியமன வாய்ப்பை இழந்துள்ளனர்.

இக்குறையைப் போக்க வேண்டுமானால் முந்திய வர்த்தமானி அறிவித்தலை திருத்தி, குறைந்தது ஒரு வருட காலப்பகுதி சேவை செய்த சகலரையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-3)

## வாழைச்சேனைப் பகுதியில் 28 தமிழர்கள் கைது!

### 4 மாணவர்கள் மட்டும் விடுதலை

கொழும்பு, ஜூலை 1

வாழைச்சேனை வாவிக்கு அப்பால் அமைந்துள்ள நாசிவன்தீவு இராமத்தில் அண்மையில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 28 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் நான்கு மாணவர்கள் மட்டும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்ட முயற்சியை அடுத்தே அந்த நான்கு மாணவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

ஏனையோர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-3)

## புதிதாக 12 டி.ஐ.ஜிக்கள் இவ்வாரம் நியமனம்

கொழும்பு, ஜூலை 1

புதிதாக பன்னிரண்டு பிரதி பொலீஸ்மா அதிபர்கள் இவ்வாரம் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களையும் சேர்த்து பொலீஸ் சேவையில் உள்ள பிரதி பொலீஸ் மா அதிபர்களின் எண்ணிக்கை 43 ஆக அதிகரிக்க உள்ளது,

பொலீஸ் சேவையில் உள்ள 40 சிரேஷ்ட அதிகாரிகளில் இருந்தே புதிய பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைப் பொலீஸ் சேவையின் சரித்திரத்திலேயே நேர்முகப்பரீட்சை வைத்து பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் முதல் தடவையாக நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

புதிய நியமனங்களில் அரசியல் செல்வாக்குப் பிரயோகிக்கப்படலாம் என்று சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

நேர்முகப் பரீட்சை என்பது வெறும் கண்துடைப்பு என்றும்—

பதவி உயர்வுக்கு என்று சில அதிகாரிகள் ஏற்கனவே மேலிடத்தால் அடையாளங்காணப்பட்டு விட்டனர் என்றும் பொலீஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ஆலயங்களில்

மீசாலை வடக்கு தட்டான் குளப் பிள்ளையார் கோயில், பளை அலிப்பளை அறத்தி அம்மன் கோயில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில், நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில், கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயில் ஆகியவற்றின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (க-72-117-111)

o o o

ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கும் தீர்த்தத் திருவிழா சனிக்கிழமை காலை 10மணிக்கும் நடைபெறும், (க)

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் மடாலயத்தில் இன்று வியாழன் மாலை 4-30 மணிக்கு பிரதோஷ பூசையும் அதனைத் தொடர்ந்து பெரியபுராண படனமும் நடைபெறும். (க-45)

o o o

நல்லூர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (க-30)

## சாளரம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

சாளரம் ஜூலை – ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது. (இ)

## 300 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்

கொழும்பு, ஜூலை 1

கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக பல்கலைக்கழக பட்டதாரிகளான 300 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இவர்களுக்கு நியமனம் வழங்கும் அனுமதியை கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு வழங்கியுள்ளதாக கல்விச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (ஓ-3)

### நாஞ்சிலாரை மீண்டும் சேர்த்தால்

# தொண்டர்கள் தீக்குளிப்பர்; ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 1

நாஞ்சில் மனோகரனை மீண்டும் தி. மு. கவில் சேர்த்தால் தி. மு. க. இளைஞர் அணித் தொண்டர்கள் ஒவ்வொருவராக தீக்குளிப்பர்.

இளைஞர் அணித் தலைவரும் கருணாநிதியின் புதல்வருமான மு. க. ஸ்டாலின் மூன்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

தி. மு. கழக எம். பியான வை. கோபாலசாமியுடன் நாஞ்சில் மனோகரன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதே அவர் தி. மு. கவில் இருந்து வெளியேற்றப்பட்டதற்குரிய காரணமாகும் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

கருணாநிதியை விமர்சிக்கும் வகையில் 'தினகரன்' பத்திரிகையில் நாஞ்சில் மனோகரன் கவிதை ஒன்றை எழுதியிருந்ததே அவரின் வெளியேற்றத்துக்குக் காரணம் என்று ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தமது வாரிசாக தமது மகன் ஸ்டாலினை வளர்த்துவிட கருணாநிதி முயற்சிக்கிறார் என்பதே தி. மு. கவில் உள்ள கருணாநிதி எதிர்ப்பாளர்களின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

கருணாநிதியின் இடத்துக்கு வை. கோபாலசாமி நியமிக்கப்படவேண்டும் என்று நாஞ்சில் மனோகரன் கோருகிறார். (ஓ-எ)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# வீதிவேலைப் பொருள்களுக்கான கூறுவிலை அறிவித்தல் - 1993

யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு வீதிவேலைப் பொருள்களுக்கான:

1. கண்டகல்
2. இறசர் சல்லி (கையால் உடைத்தது)
   ½'' - ¾'', 1½'' - 2'', 4'' - 6''
3. மண்வகைகள் (ஊரி, நாகர் கோவில்)
4. உமி

ஆகியவற்றிற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கூறுவிலை யாழ் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 08-07-1993ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ரூ. 500/- மீளளிக்கப்படும் பிணைப் பணமாகவும், ரூபா 50/- கேள்விப் படிவக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் (இணைப் பிரதியில்) சமர்ப்பித்தல் வேண்டும். கூறுவிலை யாவும் எதிர்வரும் 09 – 07 – 1993ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு ''மராமத்துப் பகுதி வீதிவேலைப் பொருள்களுக்கான கூறுவிலை - 1993'' எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் அவசியம்.

மேலதிக விவரங்களுக்கு யாழ். மாநகர சபை மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29 - 06 - 1993.

(சி-5416)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| வையத்துள்: | வானுறையும் தெய்வத்துள்: |
|---|---|
| 22 — 12 — 1937 | 01 — 06 — 1993 |

## அமரர் விஜியரத்தினம் நாகராஜா

(லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

எங்கள் ஒளி விளக்கே! எம் பாசத்தீபமே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் இவ்வுலகை நீத்து ஓர் திங்கள் ஆனதைய்யா! குடும்பத்தில் மூத்தவரே! உற்றதுணையானவரே! திடீர் என எம்மை விட்டுப் பிரிந்தீரே!

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

சகோதரிகள், மனைவி,
மைத்துனர்மார், பிள்ளைகள்,
மருமக்கள், மருமகன்.
சின்னமாமா,
மைத்துனர்
குமாரசாமி, கேதீஸ்வரன்.

மணியர் பதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

சபாபதி வீதி,
தலையாளி,
யாழ்ப்பாணம்.

(6299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சாலி (மோட்டார் சைக்கிள்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காலை 6-00 — 9-00 மணி, பிற்பகல் 4-00 — 5-00 மணி. ஐ. கே. நடேசன், ''நந்தினி வாசா'', மகேந்திரன் வீதி, அரியாலை. (26299)

### சாணிவிறாட்டி

விறகுப் பஞ்சமா? இருக்கவே இருக்கிறது சாணி விறாட்டி. சமையலுக்கு அதிக கணகணப்பைத் தருகிறது. சாணிவிறாட்டி சிக்கனமானது. இரமம் அறவே இல்லை. விறாட்டி ஒன்று ரூபா 1/- மட்டுமே. மில்க்வைற். (சி-5414)

### தேவை

கமிஷன் அடிப்படையில் சோடா சைக்கிளில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஆட்கள் உடன் தேவை. நேரில் வரவும்: 172, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாடு அச்சகத்திற்கு முன்பாக) (26304)

### வினாத்தாள் (ஆண்டு-4,5)

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு - 4, 5 மாதிரி வினாத்தாள் 4-7-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத்தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26307)

---

# அறிவித்தல்

## நாவலர் கல்வி நிறுவனம்

(சித்தன்கேணி, பண்டத்தரிப்பு)

எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும்போது இடம்பெயர்ந்த மாணவர்கள் அனைவரும் ''நவகைடன்ஸ்'', அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சனி, ஞாயிறு நாட்களில் தொடர்புகொள்ளவும்.

நிர்வாகி,
நாவலர்.

(சி-5337)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்: 02 — 07 — 1993 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1-45 மணி

முதன்மை விருந்தினர்:

திரு. அ. கருணாகரர் அவர்கள்
(முன்னாள் பிரதி அதிபர்)

பரிசில் வழங்குநர்:

திருமதி கமலாம்பிகை கருணாகரர் அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்.

இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
28 06-1993

(சி-5417)

---

யாழ்ப்பாணம், அரியாலை வெட்டுக்குளம்
திருவருள்மிகு
## புவனேஸ்வரி (நாச்சி) அம்பாள்
தேவஸ்தான
## புனராவர்தனப் பிரதிஷ்டா
# மகா கும்பாபிஷேகம்

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆனி மீ 17ஆம் நாள் (01 - 07 - 1993) வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் 7-00 மணி வரை மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

விசேட மங்கள வாத்தியமும் இடம் பெறும்.

- கும்பாபிஷேக குழு.

விளம்பர அன்பளிப்பு:

நியூ லக்கி ஸ்ரோர்,
ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

விதுபாலா ரேடர்ஸ்,
கலைமகள் வீதி, அரியாலை.

(26303)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16 — 08 — 1924 | 01 — 06 — 1993 |

## பாக்கியநாதர் யோசேப்

(செல்வராசா)

இல்லறப் பொற் கோபுரத்தின் மணிவிளக்கே
இதயமலர்த் தேன் சொரிந்த அன்பின் ஊற்றே
சொல்லினுக்குள் அடங்காத குணத்தின் குன்றே
சொல்லாமற் பறந்தெங்கே மறைந்தீர் அப்பா!
நல்ல பிதா நீர்சுமந்த செல்வங்கள் நாம்
நட்டாற்றில் கதிகலங்கிப் புலம்புகின்றோம்
எல்லையிலாக் கருணை வடிவான தேவன்
எழில்மோட்ச மனையினிலே என்றும் வாழ்க!

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகள்,
பேரன், உறவினர்.

44, 3 ஆம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம்.

(26305)

---

உ

# திருமண அழைப்பு

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆனித் திங்கள் 19 ஆம் நாள் (03 - 07 - 1993) சனிக்கிழமை பகல் 11-15 — 12-15 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| புளியங்கூடல்<br>திரு திருமதி வே. சதாசிவம்<br>அவர்களின்<br>கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன்<br>**இந்திரன்**<br>அவர்களுக்கும் | மண்டைதீவு தெற்கு<br>திரு. திருமதி ஆ. சிவகுரு<br>அவர்களின்<br>ஏக புத்திரி திருநிறை செல்வி<br>**தாமரைவதனி**<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் நிகழும் திருமணத்தின் போது தாங்களும், தங்கள் குடும்ப சகிதமாக வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணவாளக் கோலம் பூணுதல்: காலை 7-30 — 8-00 வரை மணமகன் இல்லம்

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி வே. சதாசிவம்,
தலங்காவில் பிள்ளையார் கோவிலடி,
பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

திரு. திருமதி ஆ. சிவகுரு
இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(இரு வீட்டார் அழைப்பு)

(26274)

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 23 — 10 — 1926 | 01 — 07 — 1986 |

## அமரர் சி. அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர்)

''எமைப் பிரிந்த யேந்தலே ஏழாண்டும் கழிந்ததையா
சுமையான துன்பந்தான் தொடர்ந்து வருத்திடவே
அமைதி யின்றியே யல்லற் படுகின்றோம்
இமைபோலக் காத்தவனே யின்னும் நீ வாராயோ''

பிரிவால் வருந்தும்:
மனைவியும், புதல்வர்களும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(26277)

---


தமிழீழத்திலிருந்து வெளிவரும் சிறந்ததோர் அறிவியல் ஏடு
வெளிவந்துவிட்டது!

# அறிவுக் களஞ்சியம்-13

சிறப்புப் பொது அறிவுப் போட்டி பரிசு ரூபா 3,000

விவரங்களை இந்த இதழில் பாருங்கள் — தனிப்பிரதி ரூபா 12

[5342]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ. வீதி நினைவகம்
யாழ்ப்பாணம் உதயன்



## உதயன்

### இரை தேடும் பொலீஸார்!

கொழும்பு நகரில் இரண்டு வாரங்களில் மட்டும் எண்ணாயிரத்து முந்நூறு தமிழர்களைப் பொலீஸார் கைது செய்திருக்கிறார்கள். பிரேமதாஸா கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைத் தேடுவதாகக் கூறி, வடக்கு-கிழக்கைச் சேர்ந்த இளைஞர்களையும் யுவதிகளையும் பொலீஸார் இவ்வாறு வேட்டையாடி வருகிறார்கள்!

தமிழர்களைக் கைது செய்வது, காவலில் வைப்பது, சித்திரவதை செய்வது என்பனவற்றுக்கு, ஸ்ரீலங்கா பொலீஸாரைப் பொறுத்தவரையில் எவ்வித விதிமுறையும், கட்டுப்பாடும் இல்லை கட்டாக்காலிகளை பிடிக்கும் உள்ளூராட்சி சபைகளின் ஊழியர்கள் கூட ஒரு நெறிமுறைக்கு உட்பட்டும் சிவகாருண்யத்துடனும் தமது பணியைச் செய்வர்.

ஆனால் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தேடுதல், கைது என்பனவற்றுக்கு எவ்வித சட்ட விதி முறையும் பொலீஸாரை கட்டுப்படுத்துவதில்லை. எழுபதுகளின் முற்பகுதியில் இருந்தே இந்தச் சனநாயக, மனித உரிமை மீறல் வடக்கு-கிழக்கில் அரும்பியது இப்போது அது மிக உச்சக்கட்டத்தை அடைந்து இங்கிருந்து கொழும்புக்குப் பயணம் செய்திருக்கிறது.

குறிப்பாக 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொழும்பிலும், தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்கள் பொலீஸாரினாலும், படையினராலும் சந்தேகப் பிராணிகளாகவே பார்க்கப்படுகிறார்கள்.

தமிழர்களைக் கைது செய்வது, காவலில் வைப்பது என்பன கொழும்புப் பொலிஸாருக்கு வெறும் வேடிக்கையும் மனித இம்சைப்படுத்தலும் மட்டுமல்ல அவர்களுக்கு லட்சக் கணக்கில் மேலதிக வருமானம் தரும் தொழிலாகவும் மாறி உள்ளது அதனால் அவர்கள் தமது கண்ணில் படும் தமிழர்களை எல்லாம் கைதிகள் வரிசையில் சேர்த்து விடுகிறார்கள்! இரை தேடித் திரியும் மிருகங்கள் போலச் செயற்படுகிறார்கள்!

கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் மட்டுமன்றி மேல்மட்டத்தில் உள்ளவர்களும் தமிழர்களைக் கைது செய்யும் தொழிலில் பெரும் பணம் தேடுகிறார்கள். அதனால் அந்தத் தொழில் கரிசனையுடன் நடக்கிறது; நடத்தப்படுகிறது

ஆகையால் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், ஒரு சிறு சம்பவத்தைக் காரணமாகக் கொண்டும், கொழும்பிலும்; தென்னிலங்கையிலும் தமிழர் கைதும்; காவலும் சாதாரணமாக மாறிவருகிறது. இதுவே யதார்த்தம்.

வடக்கு-கிழக்கில் இந்த அநியாயம் நடந்தபோது தெரிந்தும் தெரியாதவர்களாக இருந்த அரசினர் கொழும்பில் நடக்கும்போதும் கண்டும் காணாதவர்களாக இருப்பது ஏன்? பொலீஸாரைக் கண்காணிக்கத் திராணி இல்லை என்பதாலா? திருடனே நீதிபதியாக மாறுவது எப்படிப் பொருந்தும் என்ற வெட்கத்தினாலா?

தமிழர்கள் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் கொழும்பு அரசைப் பொறுத்தமட்டில் தமிழர்கள் தான்! அடிமைகள் என்பதால் அவர்களை எதுவும் செய்யலாம்; எப்படியும் இம்சைப்படுத்தலாம்! அல்லவா?

### நயினை நாகபூஷணி வர்ணப் படம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் தேர்த் திருவிழாவைமுன்னிட்டு நாளைய உதயனில் இரண்டு பக்கச் சிறப்புமலர் வெளிவருகிறது.

சிறப்பு மலருடன் நாகபூஷணி அம்மனின் வர்ணப் படம் இலவசமாக வழங்கப் படும்.

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

### இன்று இரு நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை நாடக அரங்கியல் பயிலகம் வெவ்வேறு மோடிகளைச்சேர்ந்த இரண்டு நாடகங்களை இன்று மேடையேற்றுகிறது கைலாசபதி கலையரங்கில் பி.ப. 4மணிக்கு நாடக நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

முருகையன் எழுதிய ''இரு துயரங்கள்'' ''பொய்க்கால்'' ஆகிய இரண்டு நாடகங்களையும் முறையே நா. சுந்தரலிங்கம், க. சிதம்பரநாதன் ஆகியோர் நெறிப்படுத்தி உள்ளனர்

### மானிப்பாய் இந்துவில் நாடக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த நாடக விழா இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

மாலை 7-00மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்ச்சிக்கு நவாலியூர் நா. சச்சிதானந்தனும்-நாளைய நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவுத் தலைவர் சபா. ஜெயராசாவும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள். (இ)

### நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில், நாளை ஞான பண்டித இசையரசு, சங்கீத பூஷணம் செ. குமாரசாமியின் மாணவிகள் செல்வி ந ஜெயதரிசினி, செல்வி சி தேவகி. செல்வி ந ஜெயபாரதி ஆகியோரின் பாட்டு இடம்பெறும். (க)

o o o

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சென் ஜோன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நாளை பிற்கபல் 1-30 மணிக்கு ஆரம்பமாகும்.

சென் ஜோன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் மாகாண ஆணையாளர் திரு. நாகேந்திரம் போஜன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் கௌரவ விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த திரு. யோகரட்ணம் யோகி, தமிழீழ கல்விக்கழக உதவிப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமார், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் செல்வி ம. வாசுகி ஆகியோரும்—

சிறப்பு (வி)ருந்தினர்களாக யாழ். மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் செ. சு. நச்சினார்க்கினியன், யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ–5)

## கைதிகளில் ஒருவர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த யுத்தக் கைதிகளில் மேலும் ஒருவர் நேற்று விடுதலை செய்யப் பட்டார்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவரை, மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தீர்மானித்ததை அடுத்தே நேற்று அவர் விடுதலை செய்யப்பட்டார்.

சனத் குணவர்த்தனா (வயது 23) என்ற அந்த யுத்தக்கைதி நேற்று நண்பகல் 12 30 மணியளவில் விடுதலைப்புலிகளால் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட அவருடன் யுத்தக் கைதிகளின் உறவினர் எட்டுப்பேரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று மாலை 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (உ-5)

## கரும்புலிகள் பாடல்கள் ஒலிநாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'கரும்புலிகள்' பற்றிய பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வெளியீட்டு விழாவை, முதல் கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்

கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு சேரலாதன் வரவேற்புரையும், திரு. யோகரத்தினம் யோகி வெளியீட்டுரையும் நிகழ்த்துவர்.

கரும்புலிகள் ஒலிப்பதிவு நாடாவை தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை இராணுவத் தளபதி திரு. பால்ராஜ் வெளியிட்டு வழங்க, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அதனைப் பெற்றுக்கொள்வார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

இயலிசை வாரிதி கி. வீரமணிஐயர், யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவத் துறையைச் சேர்ந்த வண. கலாநிதி ஏ ஜே வி. சந்திரகாந்தன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பண்டிதர் வீ. பரந்தாமன் ஆகியோர் மதிப்புரை வழங்குவர்.

### கொழும்பில் அதிகாரிகள்

## அடேல் பாலசிங்கத்தின் நூலை வரிக்கு வரி ஆராய்வு

விடுதலைப் புலிகளின் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய நூலை கொழும்பில் புலனாய்வு அதிகாரிகள் வரிக்குவரி படித்து வருவதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

''விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்''—என்ற தலைப்பில் எழுதப்பட்ட அந்த புத்தகத்தில்-

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை விடுதலைப் புலிகள் ஏன் கொலை செய்தார்கள் என்பதற்கான துப்புக்கள் உள்ளனவா என்பதை அறிந்து கொள்ளவே புலனாய்வு அதிகாரிகள் அப்புத்தகத்தை படித்து வருவதாகவும், ''சண்டே ரைம்ஸ்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### மகளின் மரணத்துக்காக

## டாக்டரிடம் ரூபா 50 லட்சம் நஷ்ட ஈடு கோரி வழக்கு

கொழும்பு, ஜூலை 1

குழந்தை நோய் வைத்திய ஆலோசகர் திருமதி பிரியானி சொய்சாவிடமிருந்து ஐம்பது லட்சம் ரூபா நஷ்டஈடு கோரும் வழக்கொன்றை சிரேஷ்ட அரச வழக்கறிஞர் திரு. றியென்சி அரசகுலரத்ன கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு நவலோக வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த தமது நான்கு வயது மகள் சுரானியின் மரணத்தால் தமக்கு ஏற்பட்ட மன வேதனை, உடல் உருக்குலைவு ஆகியவற்றுக்கு ஈடாகவே அவர் இந்த நஷ்ட ஈட்டைக் கோரியுள்ளார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவருடைய மகள் கடந்த ஆண்டு ஜூன் 19ஆம் திகதி மரணமானார்.

அண்மையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. டாக்டர் திருமதி பிரியானி சொய்சா குழந்தையைப் பரிசோதித்த வேளையில், தாம் டாக்டர் ஜே. பி. பீரிசைக் கொண்டு குழந்தையைப் பரிசோதிக்க எண்ணியிருப்பதாக அவரிடம் (திருமதி சொய்சாவிடம்) கூறியதாகவும் —

திருமதி பிரியானி சொய்சா இதை ஆட்சேபிக்கவில்லை என்றாலும் அது அவசியம் இல்லை என்று தன்னிடம் கூறியதாகவும் குறிப்பிட்டார்.

டாக்டர் பீரிஸ் குழந்தையைப் பரிசோதிக்க இருப்பதாக படுக்கை-ரிக்கெற்றில் அவர் எழுதத் தவறிவிட்டார் என்றும் அவர் கூறினார். (க)

### சூலத்தால் தாக்கி மூவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 1

வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆலயத்தில் இருந்த சூலம் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர். அவர்கள் மூவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்

தென்மராட்சியில், மந்துவில் குடியேற்றத்திட்டப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது

காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ 117)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 11 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில், துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும். (க)

### அமோனியா உரம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

அண்மையில் 'குமண' கப்பலில் யாழ். மாவட்ட கமநல சேவை நிலையத்திற்கு 325 மெற்றிக் தொன் அமோனியா உரம் எடுத்து வரப்பட்டுள்ளது. இதனை இங்குள்ள கமநல சேவை நிலையங்களினூடாக விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ 162)

### உதவிப் பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் புற்றுநோய், காசநோய், தொழுநோயாளர்களுக்கான உதவிப் பணம் பெறுபவர்கள் ஜூன் மாதம் முதல் தங்களுக்கு இணைக்கப்பட்ட தபாற்கந்தோர் அல்லது உபதபாற்கந்தோரில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

தெல்லிப்பளை அரச அதிபர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (த)

### தையல் பயிற்சி வகுப்பு

நெல்லியடி, ஜூலை 1

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கரவெட்டிப் பிரிவுக் கிளையினால் அடுத்த கட்ட பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது.

இப்பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் பெண்கள் நெல்லியடியிலுள்ள செஞ்சிலுவைச் சங்க பணிமனையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

### கடற்புலி மேஜர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகழுடல் இன்று மாமுனை. நாகர் கோயில், தாளையடி, நெல்லியடி, பருத்தித்துறை, ஆதிகோயிலடி ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும், புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும் இடங்களில் அஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெறும்

இன்று இரவு 8 30 மணியளவில் புகழுடல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'குமண' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், ஜூலை 1

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய நோயாளர்களை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்த "குமண" கப்பல் நேற்று நண்பகலில் காங்கேசன்துறைக்குச் சென்றது.

புலிகளால் விடுவிக்கப்பட்ட யுத்தக்கைதி ஒருவரையும், மற்றும் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் ஏழுபேரையும் பருத்தித்துறையில் வைத்து ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைக்குச் சென்ற இக்கப்பல் அங்கு அவர்களை இறக்கி விட்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வந்தது.

பின்னர் —

கொழும்பில் சிகிச்சைபெறச் செல்லும் நோயாளர்கள், அவர்களது உறவினர்கள் உட்பட 91 பேரை ஏற்றிக்கொண்டு அது மாலையில் திருமலை நோக்கிப் புறப்பட்டது.

அங்கிருந்து "குமண" கொழும்பு செல்லும்.

(உ-5-15-17)

## விண்ணப்ப தகைமையில் மாற்றம்

யாழ்ப்பாணம், யூலை 1

வடக்கு, கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு விண்ணப்பம் கோரியுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவிக்குரிய கல்வித் தகைமையில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

க. பொ. த. ப. சாதாரண தர தகைமையுடன் க. பொ. த. ப. உயர்தர பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியுடன், பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரியினால் அல்லது வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவுக் கல்லூரியினால் நடத்தப்படும் கூட்டுறவு உயர்தர அல்லது முகாமையியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் அறிவித்துள்ளார்.

இப்பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கு நாளை இரண்டாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்—என்பதும்

விண்ணப்பம் அனுப்பவேண்டியது பற்றிய விபரங்கள் 19. 6. 93 உதயனில் பிரசுரமானதும்-குறிப்பிடத்தக்கவை

## அகதிகளுக்கு சமையல் பாத்திரம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சமையல் பாத்திரங்களை வழங்கி உள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### சீனி குருசுவாமி

ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் சீனி குருசுவாமி நேற்றுக் காலமானார்.

இவர் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீநிவாசன் (பல்வைத்திய நிபுணர், கொழும்பு), ஸ்ரீரதன் (ஆசிரியர், வேம்படி மகளிர் கல்லூரி), றோகினி, ஸ்ரீகரன், ஸ்ரீகாந்தன், ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெயலட்சுமி, தயாளன் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயானா, ஆரணி, விவியன், வினுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று மாலை 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கு ஸ்ரீதரன்
(மகன்)

126/7, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5420)

### றோசலின் (பேபி) அந்தோனிப்பிள்ளை

பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி.றோசலின் அந்தோனிப்பிள்ளை காலமானார்.

இவர் இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் ம.அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், திருமதி. மேரிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆகியோரின் புதல்வியும், இளங்கோ [ஜேர்மனி], சேரன் [லண்டன்], ஜீவகன் [லண்டன்], நிர்மலா [பாபு),(ஆசிரியை,புனித என்றியரசர் கல்லூரி, இளவாலை),சியாமளா (பாமா, Accounting System And Service, Jaffna), சிபிலா[பப்சி), மாணவி, இளவாலை, கன்னியர் மடம் மகாவித்தியாலயம்] ஆகியோரின் பிரிய அன்னையும். அல்பிறெற் [கொழும்பு] ஜெயசீலன் (லண்டன்] திருமதி.ராணி பத்மநாதன் (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், யோசவ்ராஜா (ஓய்வுபெற்ற அதிகாரி, வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்), பிரான்சிஸ் சேவியர் (கார்க்கோ நிறுவனம், கொழும்பு], ஜெயரத்தினம் [முகாமையாளர் றீகல் சினிமா,நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது பூதவுடல் குண்டடி, சதுமலை மத்தி, மானிப்பாயில் உள்ள ஆர்.திருநாவுக்கரசுவின் இல்லத்தில் வைத்து துக்கம் கொண்டாடப்படும். இறுதிச் சடங்குகளின் விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

தகவல்:
ம.அந்தோனிப்பிள்ளை
[கணவர்]

[26312]

## முறிந்து.........

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டையே நம்பிக்கையை ஏற்படுத்தி இருந்தது என்றும்—

அதே நேரத்தில் அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்தியது என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

"விடுதலைப் புலிகள் பயன்படுத்தக் கூடிய பொருள்களை அனுப்பி, அதற்குப் பதிலாக போர்க்கைதிகளின் விடுதலையைப் பெறுவது என்ற நிலைப்பாடு இராணுவ தளபதிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது என்பது இபோதும் தெளிவாகிவிட்டது.

"இந்த விவகாரம் முழுவதும் கடுமையவன பேரமாக இருந்தது.

"எனவே இதில் இன்னும் சில முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

—இவ்வாறு பி.பி.ஸி. மேலும் குறிப்பிட்டது.

## பதற்றத்தை.,.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொழிலாளர்களுடனும் "பாஜ்"ஜை இழுத்து வருமாறு பீரங்கிப் படகிலிருந்து உத்தரவிடப்பட்டதாம்.

"றுகுணு" கப்பல் அவசரமாகக் காங்கேசனுக்கு திருப்பப்பட்டதைத் தொடர்ந்து, பருத்தித்துறையில் பொருள்களை இறக்குவதற்கு வந்த "வாதுவ" கப்பலும் திரும்பியது.

எனினும் அது மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு வந்து மாலை 6 மணிவரை பொருள்களை இறக்கிறது.

பிரச்சினைக்குரிய 'றுகுணு' கப்பலின் கப்டன் நீர்கொழும்பைச் சேர்ந்தவர். அவர் தமிழ் பேசக்கூடியவர். கொழும்பிலிருந்தும், பலாலியில் இருந்தும் உயர் அதிகாரிகள் 'வயர்லெஸ்' மூலம் விடுத்த எச்சரிக்கைகளைத் தொடர்ந்து அவர் குழப்பமுற்றுக் காணப்பட்டார்.

காங்கேசன் படை அதிகாரிகளும், கப்பல் நிறுவன அதிகாரிகளும் கொடுத்த தவறான தகவல்களாலேயே அவர் கப்பலை பருத்தித்துறைக்குக் கொண்டுவந்தாராம்.

(அ-118-5)

## தெரிவுக்குழு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையினரின் பிரச்சினைக்கு அனைவரும் ஒருமித்து தீர்வு காணவே நாங்கள் தெரிவுக் குழுவுக்கு வந்தோம்

ஆனால்தீர்வுக்கான ஆலோசனை எதனையும் அரசு முன்வைக்கவில்லை எனவே தெரிவுக்குழுவின் நோக்கம் நிறைவேறப்போவதில்லை; எதிரணிகள் தெரிவுக்குழுவில் நீடிப்பதாலும் பலன் ஏற்படப் போவதில்தல.

### ஜே. ஆரின்யோசனை

ஜே. ஆரின் சர்வஜன வாக்கெடுப்பு யோசனையைப் புத்துயிருட்டி தெரிவுக்குழுவின் முன் அரசு வைத்துள்ளது. இதனை நாங்கள் ஆதரிக்க முடியாது.

தெரிவுக்குழுவில் பெரும்பான்மையானோர் ஆளும் கட்சியினரே அக்குழுவில் நாங்கள் சுதந்திரமாகச்செயற்படமுடியாது.

எனவே தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறுவதற்கு முன்னர்—

எதிர்க் கட்சிகள் ஒன்று கூடி தெரிவுக் குழுவில் தொடர்ந்து பங்குபற்றுவதா என்பது குறித்து தீர்க்கமாக முடிவு செய்ய உள்ளன— என்றார்.

(உ-6)

# புலிகளுக்கு எழுதிய கடிதம்: யார் கையொப்பமிடுவது?

## கொழும்பில் இப்படியும் சிக்கல்

குறிப்பிட்ட சில பொருள்கள் மீதான தடையை நீக்குவது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் யார் கையெழுத்திடுவது என்ற பிரச்சினை கொழும்பில் அதிகாரிகள் மத்தியில் ஏற்பட்டது.

ஜனாதிபதி விஜேதுங்கா தான் அக்கடிதத்தில் கையொப்பமிட வேண்டும் என்று கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூறியதாகவும்—

இல்லை, கூட்டுப்படைகள் தளகர்த்தர் தான் கடிதத்தில் கையொப்பமிட வேண்டும். என்று பொலீஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா கூறியதாகவும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டது

பொலீஸ்மா அதிபரின் யோசனைகள் இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடனே கூட்டுப்படைகள் தலைமை கடிதத் தலைப்பு வரவழைக்கப்பட்டு கடிதம் தயாரிக்கப்பட்டது. பின்னர் ஜெனரல் வனசிங்கா அதில் கையெழுத்திட்டார். அந்தக் கடிதமே பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவால் கொண்டு வரப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

(உ•எ)

## மருந்து கட்டும் உபகரணங்களுக்கு தட்டுப்பாடு

மந்திகை, ஜூன் 28

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து கட்டுவதற்கான உபகரணங்கள் இல்லாமையினால் நோயாளர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(த-87)

## பருத்தித்துறை...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன்துறைக்கு வந்ததாகவும்—

கப்பலின் கப்டன் காங்கேசன்துறைப் பகுதி படை அதிகாரிகளின் அனுமதியைக் கேட்டபோது அவர்கள் பொருள்கள் பருத்தித் துறையிலேயே இறக்கப்படுவது வழக்கம் என்று கூறியதால் அவர் கப்பலை பருத்தித்துறைக்குக் கொண்டு வந்தார் எனவும் தெரிய வருகிறது.

நேற்றுக் காலை 7 மணியளவில் பருத்தித்துறைக்கு வந்த "றுகுணு' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலையை இறங்குதுறைத் தொழிலாளர்கள் உடன் ஆரம்பித்தனர்

கப்பலில் இருந்து என்ஜின் ஒயிலும், தீப்பெட்டியும் இழுவைப் படகு (பாஜ்) ஒன்றில் இறக்கப்பட்டன

இதே சமயம்—

'றுகுணு' கப்பல் பருத்தித்துறைக்கு வந்துள்ளது என்ற தகவலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் யாழ். செயலகத்துக்கு நேற்றுக்காலை அறிவித்தனர்.

அதனையடுத்து வழமை போல பொருள்களை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்பதற்காக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் புனர்வாழ்வுப் பகுதி பிரதம எழுதுநர் திரு விக்கினேஸ்வர மூர்த்தியும் பருத்தித்துறைக்கு விரைந்தனர்.

அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்ததும் இறக்கப்பட்ட பொருள்களை உடன் திருப்பி கப்பலில் ஏற்றுமாறும்—

கப்பலை உடனடியாக காங்கேசன்துறைக்குத் திருப்புமாறும் தனக்கு அவசரபணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் கப்பலின் கப்டன் தெரிவித்தார்.

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் கப்பலுக்குச் சென்று கப்டனுடன் பேசினார். கப்டனின் வேண்டுகோளின் பேரில் இறக்கப்பட்ட பொருள்கள் மீண்டும் அவசரமாக கப்பலில் ஏற்றப்பட்டன.

கப்பல் பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறைக்குப் புறப்பட சுமார் ஒன்றரை மணி நேரம் எடுத்தது.

(அ-5-118-15-162)

## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

தேசிய தொழில் பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்தும் மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, விண்ணப்பதாரிகள் 18 - 25 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தாங்கள் வதியும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க, பிரிவுத் தலைவர் / செயலாளரின் சிபார்சுடன் 07. 07. 93 புதன்கிழமை முற்பகல் 9. 00 மணிக்கு யாழ் கிளைத் தலைமையகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

### சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சி (ஆங்கிலம்)

ஆங்கிலத்திலும், கணிதத்திலும் திறமைச் சித்தியுடன் எல்லாமாக ஆறு பாடங்களில் க. பொ. த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சி (தமிழ்)

தமிழிலும், கணிதத்திலும் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம் உட்பட க. பொ. த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளை

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
30. 06. 93.

சி/5419

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01- 07 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org